ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018.07.20

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 மே

### பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2018 மேயில் மிதமான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. இறக்குமதி வளர்ச்சியினை ஏற்றுமதி வளர்ச்சி வேகத்தை விஞ்சியிருந்தமையினால் 2018 மேயில் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை ஒப்பீட்டளவில் வேகம் குறைந்த வீதமொன்றில் தொடர்ந்தும் விரிவடைந்தது. மாதத்தின் போது சுற்றுலாப் பயணிகள் வருவாய்கள் தொடர்ந்தும் அதிகரித்த அதேவேளை தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தது. சென்மதி நிலுவை நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சலானது அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய உட்பாய்ச்சல்களின் குறைவு என்பவற்றுடன் மிதமாகவிருந்தது. 2018 மே இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம், ஐ.அ.டொலர் 8.8 பில்லியனாக இருந்தது. அதேவேளை, உள்நாட்டு மற்றும் உலக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் அபிவிருத்திகளைப் பிரதிபலித்து இலங்கை ரூபா 2018 மே இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக 3.3 சதவீதத்தினாலும் 2018 யூலை 20 வரை ஆண்டின் போது இதுவரையில் 4.5 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

# அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [(அ)]

| வகை | மே 2017 ஐ.அ.டொ. மில் | மே 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - மே 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - மே 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 841 | 924 | 9.8 | 4,410 | 4,707 | 6.7 |
| இறக்குமதிகள் | 1,725 | 1,857 | 7.7 | 8,608 | 9,622 | 11.8 |
| வர்த்தக மீதி (தேறிய) | -884 | -933 | | -4,198 | -4,914 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 226 (ஆ) | 240 (இ) | 6.2 | 1,645 (ஆ) | 1,888 (இ) | 14.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 601 (ஈ) | 580 | -3.4 | 3,000 (ஈ) | 3,100 | 3.3 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 35 | 5 | | 191 | 53 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 2,263 | 113 | | 3,066 | 3,589 | |
| தி.உண்டியல்கள் மற்றும் முறிகள் | 187 | 25 | | 572 | 505 | |
| நீண்ட காலக் கடன்கள் | 126 | 88 | | 544 | 584 | |
| கூட்டுக் கடன்கள் | 450 | - | | 450 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறி | 1,500 | - | | 1,500 | 2,500 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | | | | 193 | 492 | |
| திரண்ட நிலுவை | | | | 1,587 | 1,170 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான சராசரி தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்குகிறது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக நிலுவை

வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை 2018 மேயில் தொடர்ந்தும் விரிவடைந்த போதிலும் இறக்குமதி வளர்ச்சியினை ஏற்றுமதி வளர்ச்சி வேகம் விஞ்சியதால் விரிவடைதல் வீதம் வேகம் குறைந்தது. திரண்ட வர்த்தகப் பற்றாக்குறையும் 2018இன் முதல் ஐந்து மாதங்களின் போது விரிவடைந்தது.


**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், வேளாண்மை ஏற்றுமதிகளில் பதிவாகிய குறையொன்றிற்கு மத்தியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டு 2018 மேயில் ஐ.அ.டொலர் 924 மில்லியனுக்கு அதிகரித்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தான அதிக கேள்வியின் காரணமாக கணிசமாக அதிகரித்த அதேவேளை பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் மிதமாக அதிகரித்தன. அதிகரிக்கப்பட்ட ஏற்றுமதி விலைகளுடன் ஒன்றிணைந்து ஏற்றுமதி செய்யப்பட்ட நீர்க்கலங்கள் மற்றும் வானூர்தி எரிபொருளின் அதிகரித்த அளவுகளுடன் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2018 மேயில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. தயாரிக்கப்பட்ட புகையிலை மற்றும் தெங்குடன் தொடர்புபட்ட உற்பத்திகளில் அதிகரிப்பின் காரணமாக மாதத்தின் போது உணவு மற்றம் குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மேலும், மர மற்றும் கடதாசி உற்பத்திகள், தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி தவிர கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் ஏனைய அனைத்து வகைகளிலிருந்தான வருவாய்கள் 2018 மேயில் கைத்தொழில் ஏற்றுமதிகளில் அதிகரிப்பினை நோக்கிப் பங்களித்தன. எவ்வாறாயினும், வாசனைத்திரவியங்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகள் தவிர அநேகமாக அனைத்து வகைகளிலும் குறைவான செயலாற்றத்தின் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018 மேயில் வீழ்ச்சியடைந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதி செய்வதற்கான தடை நீக்கப்பட்டமை மற்றும் முன்னுரிமைகள் பொதுவாக்கப்பட்ட திட்டம் + வசதி மீளவழங்கப்பட்டமை போன்றவற்றின் சாதகமான தாக்கத்திலிருந்து நன்மையடைந்து கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஏற்றுமதி செய்யப்பட்ட கடலுணவின் உயர்ந்த விலைகள் மற்றும் அளவுகளின் காரணமாக மாதத்தின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, கறுவா மற்றும் மிளகு ஏற்றுமதிகளின் உயர்ந்த விலைகளினதும் அளவுகளினதும் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக 2018 மேயில் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. எனினும், ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் விலைகள் இரண்டிலும் பதிவாகிய குறைவின் காரணமாக தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. 2018 மேயில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறக்குறைய 49 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்(அ)


| வகை | மே 2017 ஐ.அ. டொ.மில் | மே 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) | சன - மே 2017 ஐ.அ. டொ.மில் | சன - மே 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **614.5** | **709.7** | **15.5** | **3,316.0** | **3,632.9** | **9.6** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 30.5 | 38.5 | 26.2 | 131.9 | 193.6 | 46.7 |
| விலங்குத்தீன் | 4.7 | 7.5 | 57.6 | 33.4 | 45.7 | 36.8 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 359.2 | 398.3 | 10.9 | 1,985.5 | 2,065.5 | 4.0 |
| இதில் ஆடைகள் | 337.7 | 367.8 | 8.9 | 1,869.3 | 1,931.4 | 3.3 |
| புடவைகள் | 14.8 | 21.9 | 47.6 | 83.8 | 94.9 | 13.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 6.7 | 8.5 | 26.9 | 32.3 | 39.2 | 21.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 67.0 | 68.6 | 2.4 | 315.5 | 349.1 | 10.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 22.3 | 23.1 | 3.3 | 103.3 | 129.7 | 25.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 25.4 | 36.2 | 42.3 | 151.9 | 174.9 | 15.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 4.3 | 7.9 | 81.2 | 70.7 | 42.4 | (39.9) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 27.6 | 46.1 | 66.8 | 147.7 | 219.3 | 48.4 |
| இரசாயன உற்பத்திகள் | 11.2 | 14.3 | 28.1 | 58.3 | 66.6 | 14.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.1 | 10.6 | (4.6) | 56.4 | 58.0 | 2.8 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.0 | 1.1 | 10.4 | 13.8 | 6.4 | (53.8) |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 13.0 | 12.6 | (3.3) | 62.3 | 65.0 | 4.4 |
| பிளாத்திக்குகள் மற்றும் அதன் பொருட்கள் | 5.6 | 5.7 | 1.7 | 29.1 | 31.8 | 9.3 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 9.3 | 14.5 | 56.1 | 44.6 | 61.9 | 38.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.3 | 2.5 | 6.7 | 12.8 | 11.8 | (7.8) |
| ஏனையவை | 19.7 | 22.2 | 12.8 | 98.9 | 111.2 | 12.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **222.7** | **209.6** | **(5.9)** | **1,074.4** | **1,052.9** | **(2.0)** |
| தேயிலை | 131.6 | 121.2 | (7.9) | 589.8 | 599.3 | 1.6 |
| இறப்பர் | 2.9 | 2.3 | (18.8) | 21.9 | 16.5 | (24.7) |
| தேங்காய் | 27.9 | 24.2 | (13.6) | 143.7 | 125.1 | (12.9) |
| வாசனைத்திரவியங்கள் | 23.7 | 26.0 | 9.6 | 132.9 | 122.0 | (8.2) |
| மரக்கறிகள் | 2.8 | 2.1 | (25.4) | 12.4 | 10.8 | (13.0) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.1 | 2.0 | (33.6) | 13.5 | 13.3 | (1.5) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 13.0 | 10.5 | (19.0) | 58.3 | 51.5 | (11.7) |
| கடலுணவு | 17.7 | 21.2 | 19.9 | 101.9 | 114.5 | 12.3 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.1** | **4.5** | **11.5** | **19.9** | **21.6** | **8.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **841.2** | **923.8** | **9.8** | **4,410.2** | **4,707.5** | **6.7** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வணிகப்பொருள் இறக்குமதி மீதான செலவினமானது எரிபொருள் மற்றும் ஊர்திகளின் இறக்குமதி மீது உறப்பட்ட உயர் செலவினத்தின் பிரதான காரணமாக 2018 மேயில் ஐ.அ.டொலர் 1,857 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, எரிபொருள் அல்லாத இறக்குமதிகள் மீதான செலவினமானது இறக்குமதி வளர்ச்சிக்கு எரிபொருள் செலவினங்களின் உயர்வான பங்களிப்பினை எடுத்துக்காட்டி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இடைநிலைப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட எரிபொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம், மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உயர்வான இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகளின் காரணமாக மாதத்தின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, 2018 மேயில் இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினம் அனைத்துப் உப வகைகள் மீதும் குறிப்பாக துணை இறக்குமதிகள் மீது உயர்வான செலவுகளைப் பிரதிபலித்து அதிகரித்தது. அத்துடன், இரசாயன உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், பிளாத்திக்குகள் மற்றும் அதன் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் மாதத்தின் போது இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிகளின் அதிகரிப்பினை நோக்கி பங்களிப்புச் செய்தது. அதேவேளை, நுகர்வோர் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள தனிப்பட்ட ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினமானது சிறிய இயந்திர கொள்ளளவு ஊர்திகளினதும் கலப்பு மற்றும் மின்சார ஊர்திகளினதும் இறக்குமதிகளில் கணிசமான அதிகரிப்பின் காரணமாக 2018 மேயில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. முதலீட்டுப்பொருட்களின் பின்னணியில் 2018 மேயில் கட்டடப் பொருட்கள் இறக்குமதியானது உயர்வான சிமெந்து மற்றும் அலுமினியப் பொருட்களின் இறக்குமதியின் வாயிலாக அதிகரித்தது. எனினும், 2016இன் ஆரம்ப காலமுதல் கணிசமாக அதிகரித்த தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 0.1 மில்லியனாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மேலும், பொறிகள் மற்றும் கருவிகள் அத்துடன் போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினமும் வீழ்ச்சியடைந்தது. நுகர்வோர் பொருட்களின் கீழ், அரிசி, சீனி, பால் உற்பத்திகள், கடலுணவு, ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் என்பன மாதத்தின் போது ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தின் மீதான அழுத்தத்தினை குறைப்பதனை நோக்கி பாரியளவில் பங்களிப்புச் செய்தன. 2018 மேயில் சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், யப்பான் மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)


| வகை | மே 2017 ஐ.அ. டொ.மில் | மே 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) | சன - மே 2017 ஐ.அ. டொ.மில் | சன - மே 2018 ஐ.அ. டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **383.5** | **414.8** | **8.1** | **1,899.1** | **2,194.8** | **15.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 162.9 | 128.6 | (21.1) | 792.1 | 781.2 | (1.4) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 16.0 | 2.3 | (85.7) | 130.5 | 107.8 | (17.4) |
| இதில் அரிசி | 14.5 | 0.8 | (94.2) | 125.2 | 99.6 | (20.4) |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 38.2 | 25.2 | (34.0) | 124.7 | 130.3 | 4.4 |
| பால் உற்பத்திகள் | 26.5 | 22.6 | (14.8) | 136.9 | 137.9 | 0.7 |
| மரக்கறிகள் | 25.4 | 22.6 | (11.0) | 149.7 | 141.7 | (5.3) |
| கடலுணவு | 21.7 | 17.2 | (20.7) | 90.4 | 94.0 | 4.0 |
| பழங்கள் | 8.4 | 8.8 | 4.9 | 37.8 | 41.1 | 8.7 |
| குடிபானங்கள் | 7.1 | 9.2 | 29.1 | 32.9 | 33.3 | 1.3 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 19.7 | 20.8 | 5.2 | 89.1 | 95.2 | 6.8 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 220.6 | 286.2 | 29.7 | 1,107.1 | 1,413.6 | 27.7 |
| ஊர்திகள் | 68.0 | 149.3 | 119.6 | 316.2 | 665.9 | 110.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 42.0 | 41.8 | (0.4) | 203.8 | 210.5 | 3.3 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.8 | 19.6 | (21.1) | 117.1 | 116.6 | (0.4) |
| ஆடை மற்றும் துணைப்பொருட்கள் | 30.9 | 24.3 | (21.4) | 174.4 | 140.5 | (19.5) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 17.4 | 14.4 | (17.6) | 109.9 | 101.7 | (7.5) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 15.2 | 13.5 | (11.3) | 69.3 | 70.7 | 2.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 7.3 | 7.6 | 3.9 | 38.1 | 37.4 | (2.0) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 15.0 | 15.7 | 5.0 | 78.4 | 70.3 | (10.4) |
| **2. இடைநிலைப்பொருட்கள்** | **864.7** | **1,042.7** | **20.6** | **4,556.9** | **5,372.5** | **17.9** |
| எரிபொருள் | 215.7 | 348.9 | 61.8 | 1,423.9 | 1,750.9 | 23.0 |
| இதில் மசகெண்ணெய் | 36.2 | 115.7 | 220.0 | 243.8 | 319.5 | 31.0 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 179.4 | 233.1 | 29.9 | 1,009.3 | 1,287.1 | 27.5 |
| நிலக்கரி | 0.1 | 0.1 | 76.9 | 170.8 | 144.3 | (15.5) |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 46.5 | 12.7 | (72.7) | 271.2 | 486.7 | 79.5 |
| இதில் தங்கம் | 35.8 | 0.1 | (99.7) | 229.0 | 437.4 | 91.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 227.3 | 246.8 | 8.6 | 1,087.9 | 1,129.5 | 3.8 |
| இரசாயன உற்பத்திகள் | 66.9 | 82.6 | 23.5 | 341.1 | 374.0 | 9.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 51.6 | 62.2 | 20.6 | 253.4 | 300.2 | 18.4 |
| அடிப்படை உலோகங்கள் | 26.8 | 56.8 | 111.8 | 219.5 | 245.8 | 12.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 37.4 | 44.7 | 19.3 | 155.2 | 174.9 | 12.7 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 30.2 | 20.8 | (30.9) | 121.7 | 103.7 | (14.9) |
| வளமாக்கி | 4.5 | 12.1 | 168.9 | 27.1 | 100.6 | 270.8 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.7 | 7.1 | 49.6 | 19.8 | 28.8 | 45.2 |
| ஏனையவை | 153.1 | 148.0 | (3.3) | 636.0 | 677.6 | 6.5 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **427.3** | **398.2** | **(6.8)** | **2,041.9** | **1,988.9** | **(2.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 226.9 | 201.4 | (11.2) | 1,098.8 | 1,068.3 | (2.8) |
| கட்டடப் பொருட்கள் | 137.0 | 142.3 | 3.8 | 661.1 | 642.0 | (2.9) |
| போக்குவரத்துக் கருவிகள் | 62.9 | 54.2 | (13.9) | 278.1 | 275.6 | (0.9) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.4 | 0.3 | (29.9) | 3.9 | 3.0 | (21.8) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **49.2** | **1.2** | **(97.5)** | **110.1** | **65.3** | **(40.7)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,724.7** | **1,857.0** | **7.7** | **8,608.1** | **9,621.6** | **11.8** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2017 மேயில் 121,891 சுற்றுலாப்பயணிகளின் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2018 மேயில் வருகைகள் 129,466 ஆக 6.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018 மேயில் மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் 62.0 சதவீதத்திற்கு வகைகூறிய சுற்றுலாப்பயணிகளின் வருகைகளில் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் விளங்கின. 2018இன் முதல் ஐந்து மாதங்களின் போது மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகை 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1,017,819 ஆக 14.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சுற்றுலாப்பயணிகளின் வருகையில் ஒரே மாதிரியான போக்கினைத் தொடர்ந்து 2018 மேயில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு ஐ.அ.டொலர் 240 மில்லியனாக அதிகரித்தது. அதேவேளை, கடந்த இரண்டு மாதங்களின் போது அவதானிக்கப்பட்ட சாதகமான முன்னேற்றங்கள் திருப்பம் பெற்று தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017 மேயின் ஐ.அ.டொலர் 601 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 மேயில் ஐ.அ.டொலர் 580 மில்லியனாக ஆண்டிற்கு ஆண்டு 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், திரண்ட நியதிகளில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் முதல் ஐந்து மாதங்களின் போது 2017இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,100 மில்லியனாக 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

**வரைபடம் 4: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

**நிதியியல் பாய்ச்சல்கள்**


2018 முதல் ஐந்து மாத காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 102 மில்லியன் கொண்ட திரண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் 2018 மேயில் ஐ.அ.டொலர் 89 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினை அரசாங்கப் பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடு அவதானித்தது. சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிலிருந்து பதிவாகிய வெளிப்பாய்ச்சல்கள், ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் மூலமான வட்டி வீத அதிகரிப்பினைத் தொடர்ந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சொத்துப்பட்டியல்களின் மீள்சமநிலைப்படுத்தலினை பரந்தளவில் பிரதிபலிக்கின்றது. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் 2018 சனவரி – மே காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 53 மில்லியன் கொண்ட தேறிய

உட்பாய்ச்சலொன்றுடன் 2018 மேயில் ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2018 மே மற்றும் ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியின் போது முறையே ஐ.அ.டொலர் 325 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 231 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2018 மே இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மட்டமானது மாதத்தின் போது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திலுள்ள கடப்பாடுகளுக்கான காலாந்தரக் கொடுப்பனவு, கூட்டுக்கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீள்கொடுப்பனவு என்பவற்றின் அடிப்படைக் காரணமாக 2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியன் கொண்ட வரலாற்று ரீதியாக உயர் மட்டத்துடன் ஒப்பிடுகையில் 4.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமாக ஐ.அ.டொலர் 8.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 மே இறுதியில் ஐ.அ.டொலர் 11.0 பில்லியனுக்கு வகைகூறியது (6 மாத இறக்குமதிகளுக்குச் சமனானது).

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீத அசைவுகள்**

2018 யூலை 20 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 4.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் கனடியன் டொலர், அவுஸ்ரேலியன் டொலர், இந்திய ரூபா தவிர்ந்த ஏனைய பல முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 யூலை 20 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -4.5% |
| யூரோ | -13.5% | -2.0% |
| ஸ்ரேலிங் வுண் | -10.5% | -1.3% |
| யப்பானிய யென் | -5.1% | -4.7% |
| கனேடியன் டொலர் | -8.6% | +0.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | +1.3% |
| இந்தியன் ரூபா | -7.5% | +2.9% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி